2022 ஏப்ரல் 7]

கொண்டு செல்வேன் என்று சொல்லிவிட்டார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி சொல்லி உரையை முடித்திருக்கலாம். மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், மறுபடியும் சொல்ல வேண்டாம், பதிலை மட்டும் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, சட்டமன்றத் தொகுதிக்கு* Mini Indoor Stadium *என்கின்ற ஒரு புதிய திட்டத்தைத் தந்திருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட இடமானது ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு, பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அந்த இடத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.K. *செல்வராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

இல்வச வீட்டுமனைப் பட்டா

***3271—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில், ஏற்கெனவே

906 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேட்டுப்பாளையம் தொகுதியில் வாழும் ஆதி திராவிடர் மக்கள், இலவச வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பம் செய்யும் நேர்வுகளில் அருகிலேயே நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில், மேட்டுப்பாளையம், காரமடை, கூடலூர் ஆகிய நகராட்சிகளும், நம்பர் 4 வீரபாண்டி, சிறுமுகை ஆகிய பேரூராட்சிகளும், 18 ஊராட்சிகளும் இருக்கின்றன. இந்தப் பகுதிகளில், தாழ்த்தப்பட்ட மக்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் பார்த்தால், ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் வீட்டிலும், ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்ற நிலை இருந்து வருகிறது. ஆகவே, மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் வசித்துவருகின்ற குடும்பங்களில், எந்தெந்த வீடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனரோ, அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 906 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே சொன்னார்கள். கடையம்பாளையம் கிராமத்தில் 788/2 க.ச. எண்ணில் 8 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்துவதற்கு அரசிற்கு முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்திலே எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதியில் வசிக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதன்படி நாங்கள் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, ஒரே வீட்டில் மூன்று குடும்பங்கள் வசித்து வருவது உண்மைதான். அதற்காகத்தான் நிலுவையில் எத்தனை விண்ணப்பங்கள் இருந்தாலும், அது தொடர்பான அறிக்கையைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் தேவையான அளவு நிலங்களைக் கையகப்படுத்தி, தகுதியான நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் வட்டத்தில் சிக்கதாசம்பாளையம் கிராமத்தில் மேட்டுப்பாளையம் நகரத்தில் க.ச. எண். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: சுருக்கமாகத்தான் கேள்வியைக் கேட்கிறேன். அதிகமாக நீட்டிக்கவில்லை. க.ச. எண். 236 A, 236 B–ல் ஏழு ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டு ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதில் சில முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அரசு ஊழியர்கள் வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற்றிருக்கிறார்கள். வறுமைக்கோட்டிற்கு மேலே இருக்கிறவர்கள் வீட்டுமனைப்பட்டாக்களைப்பெற்றிருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற்றிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே புகார் மனு அளித்ததன்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்திருக்கிறார்கள். 291 நபர்களை ஆய்வு செய்ததிலே

[2022 ஏப்ரல் 7

60–க்கும் மேற்பட்ட தகுதியில்லாதவர்கள் வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி என்ன கேட்க வருகிறீர்கள்?*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி என்ன? 291–ல் 60 பேர் இல்லை, என்பதுதானே?*

திரு. A.K. செல்வராஜ்: *கேள்வியைத்தான் கேட்க வருகிறேன். அதற்குள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே முந்திவிட்டீர்கள். ஆகவே, 60–க்கும் மேற்பட்டவர்கள்—வெளியூரில் இருக்கிறவர்கள், அரசு ஊழியர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் போன்ற தகுதி இல்லாதவர்கள் வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதை ஆய்வு செய்து, ஏற்கெனவே அந்தப் பகுதியில் வசித்துவருகின்ற வீட்டுமனைப் பட்டா இல்லாத ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறோம். துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழகத்தில் e–patta முறையில் பதிவேற்றம் செய்ய துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் முடிவடைந்தவுடன் அனைவருக்கும் e–patta வழங்கப்படும். அதேபோல, பட்டா வழங்குவது மட்டுமல்ல; நிலத்தை அளவீடு செய்து கொடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை துறைமூலம் எடுப்போம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) உட்காருங்கள். எல்லோருக்கும் பேச வாய்ப்பு உண்டு.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அரசுப் பள்ளிகளில் பயின்று, 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டின்மூலம் தொழிற்கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்குகளில் அரசுக்குச் சாதகமாக வெளியான தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கையில் 7.5 விழுக்காடு ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.*

நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளில் கடந்த ஆண்டுகளின் மாணவர் சேர்க்கை விவரங்களின்படி, அரசுக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் முன்னிலை வகிக்கும் சுயநிதிக் கல்லூரிகளில், மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் சேர்க்கை பெற்று வந்த சூழ்நிலையில், இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்று நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன்.

முற்பகல் 11–20

அதன் அடிப்படையில், அரசுக்கு உரிய பரிந்துரைகளை அளித்திட மாண்பமை டெல்லி உயர் நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு. த. முருகேசன் அவர்கள் தலைமையில் ஓர் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையம் அளித்த அறிக்கையின்படி, அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு, அனைத்து இட ஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும் 7.5 விழுக்காடு